From Mamary Nadar Periyatanakaran - lives in Pielar near Veerasolapuram 25/11/65

முன்காலத்தில் மாமரி நாடார் கொங்குநாட்டுக்கு வந்த வரலாறு.

முன்காலத்தில் திருவாட தேசம் என்ற நாட்டில் ஒரு அரசர் ஆண்டு வந்தார். அப்போது இந்த மாமரி நாடார் குலம் அந்த் நாட்டில் இருந்து வந்தார்கள். அப்படியிருந்து வரும் காலத்தில்.

அந்த நாட்டு ராஜாவின், பூமியிலிருந்த ஒரு பெரிய(ஏரி)குளத்திலிருந்து தண்ணீர் முறித்துக் கொண்டு பெரு வெள்ளங் கொண்டு, வெள்ளாமையை சேதப்படுத்தியது. அந்தத் தண்ணீரை தடுத்து நிறுத்துவதற்க்காக. அந்த நாட்டு ராஜாவானவர் நகர ஜனங்களை வீட்டுக்கு ஒரு ஆள் மண்வெட்டியுடன் வரும்படி கட்டளையிட்டார்.

அதன்பிரகாரம் நகர* ஜனங்கள் எல்லோரும் வந்தார்கள். ஆனால், நாடார் குடும்பத்திலிருந்து ஒருவன் வரவில்லை இதையறிந்த, ராஜா வானவர் கோபம் கொண்டு, சேவகரைக் கூப்பிட்டு அந்த நாடாரை யானையின் காலில் தலையைக் கொடுத்து நசுக்கி விடும்படி சொன்னார். அதன்படி சேவகர் அந்த நாடாரை யானையின் காலில் கொடுத்து நசுக்கினார்கள்.

இதையறிந்த மற்ற நாடார்கள் அண்ணன் தம்பி
இரண்டுபேர், மைத்துணர் ஒருவர், ஆக மூன்று
பேரும் மனைவி மக்களுடன் திருவாட தேசத்தை
விட்டு கொங்குநாடு வந்து சேர்ந்தார்கள்.

அப்போது காங்கய நாட்டில் வீரசோழபுரம்
என்ற ஊருக்குத் தென்புறம் கருவேலமரங்
கள் அடர்ந்த கானலாக இருந்தது.

அந்த நாடார் குடும்பம் மீண்டும் வீரசோழபுரம்
அருகில் வந்து மேற்சொன்ன கருவேலமரம்
இருந்த புதருக்குள் சென்று சமையல் செய்
தார்கள்.

அப்போது அந்த ஊரில் ஒரு பெரிய
பணக்காரக்கவுண்டர் காளைமேல் ஏறி சவாரி
செய்துகொண்டு நாடார்கள் சமையல் செய்து
கொண்டிருக்கும் இடத்திற்கு நேர் கிழபுரம்
ரோட்டில் வந்தார். அப்போது நாடார்கள்
சமைத்துக் கொண்டிருக்கும் புதருக்குள் இருந்
து புகை வருவதைக் கண்ட கவுண்டர் உள்ளே
சென்று நாடார்களைக் கண்டு நீங்கள் யார் என்று
கேட்டார். அதற்கு நாடார்கள் தங்களுடைய
வரலாற்றை சொன்னார்கள்.

அதைக்கேட்ட கவுண்டர் மனதில் ஒரு யோசனை தோன்றியது. அதாவது வீரசோளபுரத்தில் ஊர் சாவடி என்று ஒரு சாவடி தெற்கு வடக்கு ரோட்டிற்கும் கிழபுரம் இருந்தது. அந்த சாவடியில் இரவில் யார் போய் படுத்திருந்தாலும் மறுநாள் காலையில் இறந்து விடுவார்களாம். ஆகையால் இப்போது அந்தக் கவுண்டர் மனதில் இந்த யோசனையை நினைத்து.

நாடார்களை நோக்கி 'அப்பா நாடார்களே! குழந்தை குட்டிகளுடன், இந்தக் காட்டுக்குள் ஏன் இருக்கிறீர்கள், நம் ஊரில் ஒரு சாவடி இருக்கிறது இன்று இரவு அங்கு வந்து படுத்துக் கொள்ளுங்கள்' என்றார். நாடார்கள் அதற்கு சம்மதித்து ஊர் சாவடிக்கு சென்று தங்கினார்கள். இந்த நாடார்கள் திருவாடதேசத்திலிருந்து வரும்போது இவர்கள் கொண்டு வந்த சாமாணக் கூடையில் ஒரு கல் கிடக்கவும் அதை அவர்கள் எடுத்து அப்புரம் எறியவும் மறுபடியும் அதே கல் வந்து கூடையில் இருக்கவும். இப்படியே வந்து கடைசியில் இந்த ஊர் சாவடியில் கூடைக்குள் அதே கல் கிடந்தது அப்போது பார்த்த நாடார மனைவி மார்கள் அந்தக்கல்லை எடுத்து

4.

சாவடிக்கு கிழபுரம் வீசி எறிந்தார்கள் அப்படி எறியப்பட்ட அந்தக்கல் ஒண்டிவீரய்யன் என்ற பெயருடன் சாமியாக உருவெடுத்தது.

அந்த சாவடியில் படுப்பவர் தினசரி எப்படி இறந்து போகிறார்கள் என்றால் காரணம் அந்த சாவடிக்கு மேல்புரம் ரோடு, ரோட்டிற்கு மேல்புரம் ஒரு பெரியமுனி குடிகொண்டிருந்தது அதுதான் தினசரி, சாவடியில் படுப்பவரை கொன்றுபோடுவது வழக்கம். இப்படியிருக்கும் போது. நாடார்கள் படுத்திருந்த சாவடியின் உச்சியில் நடுச்சாமத்தில் சகுனம் சொல்லியது அதைக் கேட்ட நாடாரில் மூத்தவரானவர் தன் தம்பியை நோக்கி. 'அப்பா தம்பி, பள்ளி, இந்த நேரத்தில் உச்சியில் சகுனம் சொல்கிறது. ஆகையால், பஞ்சாங்கத்தை எடுத்து நல்ல சகுனமா, கெட்ட சகுனமா பார்' என்றார்.

தம்பியானவர் கௌளி சாஸ்த்திரம் நன்றாகப் படித்தவன் உடனே பஞ்சாங்கத்தை எடுத்து பார்த்து விட்டு அண்ணனை நோக்கி

'அண்ணே! நாம் இந்தச் சாவடியில் படுத்திரு
ந்தால் நம் எல்லோருடைய உயிருக்கும் ஆபத்
து வரும்' என்றான்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்
போது ரோட்டின் மேல்புறம் இருந்த முனி
யாகப்பட்டது ஆண் குரலை பெண் குரலையென்று
சத்தமிட்டு ஆக்ரோஷத்துடன் வந்தது.
அப்போது இந்த நாடார்களுடன் வந்த
ரெண்டி வீரய்யன் என்ற சாமி முனியை தடுத்து
சண்டை போட்டது அப்போது நாடாரில் மூத்த
வ[redacted]ரானவர் எழுந்து, முனியின் ஜடையை
கையில் பிடித்து இழுத்து அடித்து முனியின்
பற்களை பிடுங்கிவிட்டார். பிறகு முனியைக்
கொண்டு போய், ரோட்டின் மேல்புறம் கிழக்கு
முகமாக வைத்து, அதன் முன் பூமியில் ஏழு
கோடு போட்டு விட்டு. முனியை நோக்கி
'முனீஸ்வரா! நீ இந்த ஏழு கோட்டுக்கு இந்
தப்புறம் வரக்கூடாது. அப்படி வராமலிருந்
தால் உனக்கு வேண்டிய பலியும் முதல் பூஜை
யும் உனக்கு கொடுக்கிறேன்' என்றார்.

முனி அதற்கு ஒப்புக் கொண்டு இனிமேல்
நான் வரமாட்டேன் என்று சத்தியமும்

செய்து கொடுத்தது. அன்று இரவு கழிந்து மறுநாள் வெளுத்ததும் இவர்களை சாவடிக்குப் போகச் சொன்ன கவுண்டரானவர். இவர்கள் இறந்து விட்டார்களா, உயிருடன் இருக்கிறார்களா போய் பார்த்து வருவோம் என்று சாவடிக்கு வந்தார். அப்போது நாடார்கள் மூவரும் சுருட்டு பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அதைக்கண்ட கவுண்டர் ஆச்சரியம் அடைந்து அவர்கள் அருகில் சென்று நடந்த உண்மையினை அறிந்து அவர்களை புகழ்ந்து பாராட்டினார்.

பிறகு நாடார்களை நோக்கி 'அப்பா! நீங்கள் என்ன வேலை செய்வீர்கள்?' என்றார். அதற்கு நாடார்கள் 'நாங்கள் பனைமரம் ஏறுவோம்' என்றார்கள். அதற்கு கவுண்டர் 'சரி நம் ஊரில் இருந்து கொள்ளுங்கள் என் தோட்டத்தில் பனைமரம் நிறைய இருக்கிறது. அதை நீங்கள் சும்மாவே ஏறிக் கொள்ளுங்கள் குத்தாயம் ஒன்றும் வேண்டாம்' என்றார். அதற்கு நாடார்கள் சம்மதித்து நாடாரில் மூத்தவரானவர் பனைமரத்தில் தலைகீழாய் ஏறிக்காண்பித்தாராம். அன்று முதல் அந்த நாடார்கள் அங்கிருந்து இன்றும் அவர்கள் வம்சம் இருந்து வருகிறது.